Registered as a Newspaper in Sri Lanka

விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 2 17-7-1985 புதன்கிழமை (ஆடி 2 ஷவ்வால் 28) முழக்கம் 161

பலப்பிட்டியவில் பரபரப்பு; எச்சரிக்கையுடன் 'சிலிண்டர்'!

பலப்பிட்டிய கடற்கரைப் பகுதியில் நேற்றுக் காலையில் காணப்பட்ட மர்மத்துக்குரிய "சிலிண்டர்" ஒன்றினால் இப்பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது. கடலில் வந்து ஒதுக்கப்பட்டது போன்று காணப்பட்ட இந்தச் சிலிண்டரில் "எவரும் தொடக்கூடாது எச்சரிக்கை" என எழுதப்பட்டிருந்ததையடுத்தே பரபரப்பு அதிகரிக்கத் தொடங்கியது. உள்ளே குண்டு வைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் பொதுமக்கள் அயல் பகுதிகளிலிருந்து வெளியேறத் தொடங்கினர். பின்னர் கொழும்பிலுள்ள குண்டு வெடிப்புத்துறை நிபுணர்களுக்கு தகவல் அனுப்பப்பட்டது. செய்தி அச்சுக்குப் போகும்வரை மேலதிக தகவல்கள் கிடைக்கவில்லை.

தமிழர் பிரச்சினையைத் தீர்க்க ஆகக் கூடுதலாக வழங்கக் கூடியது மாநில சுயாட்சியே!

ராஜீவ் காந்தி அறிவிப்பு

இந்தியாவில் இருப்பது போல மாநில ஆட்சி அமைப்புக்கு கூடுதலான எந்தவொரு அரசியல் உரிமையையும் இலங்கைத் தமிழருக்கு வழங்க இந்தியா ஆதரவு தர முடியாது என பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி சென்னையில் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகளுக்கு இந்தியா ஆதரவு அளிக்கவில்லை எனச் சொன்ன பிரதமர் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தற்போது பூட்டானில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் நல்ல தீர்வைக் காணும் என தாம் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் சொன்னார்.

"இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு சுதந்திரமான தனிநாடு கொடுக்கப்படும் என்ற பேச்சுக்கே இடமில்லை" என்று பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி சென்னையில் திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்ததாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது செய்தியில் நேற்றுத் தெரிவித்தது.

இனப்பிரச்சினைக்குக் காணப்படும் தீர்வு அரசியல் சாஸனத்தில் இடம்பெறும் வகை

—4-ஆம் பக்கம் பார்க்க

★ முதலாவது பட்டியல் கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டது:

பூஸாவிலிருந்து நூறு இளைஞரை விடுதலை செய்யுமாறு உத்தரவு!

பெற்றோர் நேரடியாக அழைக்கப்படுவர்; யாழ்ப்பாண இளைஞர்கள் 31 பேர் மட்டுமே

(கொழும்பு)

தடுப்புக்காவலிலுள்ள அறுநூற்று நாற்பத்தி மூன்று தமிழ் இளைஞர்களை விடுவிப்பதென அரசாங்கம் கடந்த வாரம் முடிவெடுத்து அறிவித்திருந்தபோதிலும், நேற்றுவரை நூறு பேரை மட்டுமே விடுதலை செய்வதற்கான உத்தரவு பூஸாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், இதில் முப்பத்தொரு பேர் மட்டுமே யாழ்ப்பாணத்தில் கைதானவர்களெனவும் தெரியவந்துள்ளது.

கடந்த 8ம் திகதி பூட்டான் மாநாடு ஆரம்பமானதையடுத்து, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் போது சம்மதம் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க, 643 தமிழ் இளைஞர்களை விடுதலை செய்வதென மந்திரி சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நிபந்தனை எதுவுமின்றி இவர்கள் விடுதலை செய்யப்படுவார்களென்றும் அறிவிக்கப்பட்டது.

ஆனால், தற்போது பாதுகாப்பு அமைச்சு பல கட்டுப்பாடுகளுக்கமையவே இளைஞ

—4-ஆம் பக்கம் பார்க்க

யாழ். மாநகராட்சிப் பிரிவில் 510 பேருக்கு வீட்டுக் கடன்

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் ஐநூற்றுப் பத்துக் குடும்பங்களுக்கு வீடமைப்புக் கடன் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கெனக் கிடைத்த ஆயிரத்துக்கும் அதிகமான விண்ணப்பங்களிலிருந்து இத்தெரிவு நடத்தப்பட்டது.

மாநகர ஆணையாளர் திரு சி. வி. கே. சிவஞானம் தலைமையில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அன்ரன் அலபிரட், யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர்களான திருவாளர்கள் கே. மாணிக்கவாசகர், எஸ்.சிவகுரு

—4-ஆம் பக்கம் பார்க்க

இரு கொலைகள்

சிங்கள விவசாயிகளான பிரேமரட்ண, ஜெயசிங்கா ஆகியோர் புல்மோட்டையில் தீவிரவாதிகளினால் கொல்லப்பட்டதாக 'லங்கா புவத்' அறிவித்துள்ளது.

கடந்த பதினோராம் திகதி காணாமல்போன இவர்கள் காட்டுக்குள் சுடப்பட்ட நிலையில் பிணமாகக் காணப்பட்டனராம்.

லண்டன் கவுன்ஸில் தீர்ப்பு

லண்டன் கணபதி கோவில்: அகதிகள் தங்க முடியாது!

(லண்டன்)

பிரிட்டனிலுள்ள இந்து ஆலயமொன்றில் தங்கியிருக்கும் ஈழத் தமிழ் அகதிகளை அங்கிருந்து வெளியேற்றுமாறு "லண்டன் கவுன்ஸில்" உத்தரவிட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

தெற்கு வெம்பிள்டனில் உள்ள மகா கணபதி ஆலய நிர்வாகிகளுக்கே இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் லண்டன் சென்ற பல தமிழர்கள் இங்கு அகதிகளாக வசித்து வருகின்றனராம். இச்செயல் பிரிட்டன் வீட்டு வசதிக் குடியிருப்புச் சட்டத்தை மீறுவதாக "லண்டன் கவுன்சிலுக்கு" புகார் செய்யப்பட்டதை அடுத்தே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பாதிக்கப்பட்ட மீனவருக்கு 2-ம் கட்ட உணவு முத்திரை

(குருநகர்)

யாழ்ப்பாண மாவட்டத்தின் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான இரண்டாம் கட்ட உணவு முத்திரை விநியோகம் இப்போது ஆரம்பமாகியுள்ளது.

வடக்கில் அமுல் செய்யப்பட்ட பாதுகாப்புச் சட்டத்தில் பாதிக்கப்பட்ட கரையோரப் பகுதி மீனவர்களுக்கே உணவு முத்திரை வழங்கப்படுகின்றது. முதலாம் கட்ட உணவு முத்திரை கடந்த ஆறு மாதங்களுக்கும் வழங்கப்பட்டது.

முதலாம் தொகுதி உணவு

—4-ஆம் பக்கம் பார்க்க

நாளை முதல் 3 நாட்களுக்கு

யாழ். மத்திய கல்லூரியின் 150வது ஆண்டு நிறைவுவிழா

யாழ். மத்திய கல்லூரியின் நூற்று ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழா நாளை முதல் தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறும்.

கல்லூரி அதிபர் திரு.வே.பாலசுந்தரம் தலைமையில் நாளைகாலை நடைபெறும். இவ் விழாவின் முதலாம் நிகழ்ச்சியாக ஆண்டு நிறைவு மலரை துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் வெளியிட்டு உரையாற்றுவார். டாக்டர் ஜெயபசுபதி இதன் முதற் பிரதியைப் பெற்றுக்கொள்வார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் வெள்ளிக்கிழமை உப

—4-ஆம் பக்கம் பார்க்க

தட்சரின் எச்சரிக்கை

(லண்டன்)

எந்தவொரு நாட்டு விமானக் கடத்தல்காரர்களாவது பிரிட்டனில் விமானத்தை இறக்குவார்களானால் அந்த விமானம் மீண்டும் பறக்க

—4-ஆம் பக்கம் பார்க்க

கட்டுநாயக்க குண்டு வெடிப்பை ஜெயக்குமாரே நடத்தினாராம்!

ஜனாதிபதி கொலை முயற்சி தொடர்பாக கைது செய்யப்பட்டிருக்கும் கட்டுபெத்த பல்கலைக்கழக பொறியியல் மாணவரான ஜெயக்குமாரே கட்டுநாயக்கா புகையிரத நிலைய குண்டு வெடிப்புச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருந்ததாக பொலிஸ் அதிகாரிகளை மேற்கோள்காட்டி 'லங்கா புவத்' நேற்று அறிவித்தது.

ஏப்பிரல் மாதம் பிரிட்டிஷ் பிரதமர் மார்கிரட் தட்சர் இங்கு வருவதற்கு முதல் நாள் இக் குண்டு வெடிப்பு இடம்பெற்றது. இதில் ரஞ்சன், வரதராஜன் ஆகியோரும் பங்குபற்றினராம்.

கடந்த வாரக்குண்டு வெடிப்பு முயற்சி தொடர்பாக இது

...4 ஆம் பக்கம் பார்க்க

இந்திய விமான விபத்து:

குரல் பதிவுப் பெட்டிகள் நேற்றுத் திறக்கப்பட்டன

கடந்த மாதம் அத்திலாந்திக் சமுத்திரத்தின்மேல் விபத்துக்குள்ளான எயர் இந்திய விமானத்தின் காக்பிட் குரல் பதிவுக் கருவிப் பெட்டி நேற்று பம்பாயில் திறக்கப்பட்டது.

இந்த விமான விபத்துபற்றி

—4 ஆம் பக்கம் பார்க்க

சட்டவிரோத மின்பாவனை காரணமாக நான்கு மின்மாற்றிகள் எரியும் நிலையில்

(உடுப்பிட்டி)

நெல்லியடி உப அலுவலகத்திற்குச் சொந்தமான நான்கு மின்மாற்றிகள் எரியும் நிலையில் உள்ளதாகத் தெரியவருகிறது.

எப்பொழுது இவைக்கு முடிவு காலம் வரும் என்று கூற முடியாது என்று தெரிவிக்கப் படுகிறது.

இப் பகுதியில் திருட்டுத்தனமாக மின்சாரம் பெறுபவர்கள் தொகை அதிகரித்துள்ளமையாலேயே இவைக்கு இந்த அபாய நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கரவெட்டி சாமியன் அரசடி, நெல்லியடி காளி கோவில் நெல்லியடி யாழ்வீதி, வதிரிச் சந்தி ஆகிய இடங்களிலுள்ள இந்த மின்மாற்றிகளிலிருந்து செல்லும் கடத்திகளிலிருந்து சுமார் நூற்றைம்பது பேரளவில் கள்ள மின்சாரம் பெறுவதாக மேலிடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள புகார் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிப் பொது அமைப்புக்கள் இவ்விடயத்தில் நடவடிக்கை எடுக்காதா எனப் பொதுமக்கள் கேட்கின்றனர்.

10லட்சம் வீடமைப்பு கடன் சரியாகப் பயன்படவில்லை

(சுண்டுக்குளி)

பத்துஇலட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் வீடமைப்புக் கடன் பெற்றவர்களின் அநேகமானோர் தாம் பெற்ற கடன் பணத்தை உரிய முறையில் பயன்படுத்தத் தவறி விட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் இம்மாவட்டத்திலுள்ள 18 உதவி அரச அதிபர் பிரிவுகள் ரீதியாகப் பத்து இலட்சம் வீடமைப்புத் திட்டத்திற்கான கடனுதவிப் பணம் வழங்கப்பட்டிருந்தது.

தற்போது இக்கடன் பணம் பெற்றவர்கள் வீடமைப்பு வேலைகளைப் பூர்த்தி செய்து முடிக்குமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

பூநகரியில் மக்கள் அச்சம் இரவு அட்டகாச எதிரொலி

(பூநகரி)

பூநகரியில் அத்துமீறிய ஓர் கோஷ்டியினரின் செயலால் மக்கள் அச்சத்துடன் வாழ்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சில தினங்களுக்கு முன் ஓரிரவு, பூநகரி அரசினர் வைத்தியசாலையில் வாடியைச் சேர்ந்த அவர்கள் சென்று அங்கு கடமையாற்றும் பெண் ஊழியர் ஒருவரைப் பலாத்காரம் செய்ய முற்பட்டனராம். அதே இரவு மற்றும் பல வீடுகளுக்கும் சென்று அவர்கள் இவ்வித பலாத்கார முயற்சி மேற்கொண்டனராம், வில்லடி என்ற இடத்தில் பலசரக்குக்கடை ஒன்றிற்குச் சென்ற அவர்கள் கணவனை விரட்டியடித்து விட்டு மனைவியைப் பலாத்காரம் செய்ய முற்பட்டபோது அத்தம்பதிகள் ஓடிவிட்டனராம்.

பிறந்தநாள் வாழ்த்து

* மானிப்பாய் வட கிழக்கு. மகேந்திரம் அருளானந்தபேபி தம்பதிகளின் மகள் தர்சிலா இன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

* மாதகல் மேற்கு. நவரத்தினம் திலகராணி தம்பதிகளின் மகன் கங்கை அமரன் இன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

* நல்லூர் மருதடி வீதி, ஸ்ரனிஸ்லாஸ் பிலோமினா தம்பதிகளின் மகன் குணசீலன் தனது பிறந்தநாளை இன்று கொண்டாடுகிறார்.

* திருநெல்வேலி நடராசன் சிந்தாமணிதேவி தம்பதிகளின் மகள் சுதர்சினி இன்று ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

* கொழும்புத்துறை மணியம் தோட்டத்தைச் சேர்ந்த திரு. வ. தர்மதாஸ் லலிதா தம்பதிகளின் புதல்வன் இராயப்புதாஸன் இன்று தனது 7 வது பிறந்த நாளை கொண்டாடுகிறார்.

* யாழ், சுண்டுக்குளி, செபா சோபியா தம்பதிகளின் மகள் பிரிஷாந்தி இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

கல்விக் கந்தோர் இடமாற்றம்

(பரந்தன்)

கிளிநொச்சி கச்சேரி புதிய கட்டடத்துக்கு மாற்றப்பட்டதைத் தொடர்ந்து, இதுவரை காலமும் கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் இயங்கி வந்த கல்வித் திணைக்களம் முன்னர் கச்சேரி இயங்கி வந்த கட்டடத்துக்கு மாற்றம் செய்யப் பட்டுள்ளது.

மக்கள் விருப்பம்

(சுழிபுரம்)

வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தை சுழிபுரம் வழக்கம்பரை நவீன சந்தைக் கட்டட மேல்மாடிப் பகுதிக்கு மாற்றும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

தற்போது சங்கானை கலாசார நிலைய மண்டபத்தில் இயங்கும் இக்காரியாலயம் நிரந்தரமான கட்டட வசதியின்றி இருப்பதனாலும் மூளாய், பொன்னாலை மக்களுக்கு அதிக தூரத்தில் இருப்பதனாலும் இந்த இடமாற்றத்தின் அவசியத்தை மக்களும் விரும்புகிறார்கள்.

உடுப்பிட்டி வட்டாரப் பாடசாலைகளின் இசை, நடன, நாடக போட்டி முடிவுகள்

(உடுப்பிட்டி)

உடுப்பிட்டி கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையில் இடம்பெற்ற இசை, நடன, நாடகப் போட்டிகளில், கரவெட்டி திரு.இருதயக்கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், நெல்லியடி மெதடிஷ்த மிஷன் தமிழ் பாடசாலை ஆகியன போட்டி விதிகளின்படி தாம் பங்குபற்றிய மூன்று நிகழ்ச்சிகளிலும் முதலிடங்களைப் பெற்றுள்ளன. அம் முடிவுகள் பின்வருமாறு: -

ஆரம்பபிரிவு: - புதிய ஆக்கம் (தனி) வே. வரலட்சுமி (கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தி); கிராமிய இசை (தனி) வே. பரன்சி (திரு.இருதயக் கல்லூரி); கர்நாடக இசை (தனி) க. பிருந்திக்கா (பொலிகண்டி இந்து த. க. வித்தி)! புதிய ஆக்கம் (குழு) -விக்கினேஸ்வராக் கல்லூரி; கர்நாடக இசை (குழு)- நெல்லியடி மெ. மி. த க. பாடசாலை; - புதிய ஆக்கம் (கலவன் குழு) திரு இருதயக் கல்லூரி; நடனம்:- பரதம் (தனி) நா. அனுராதா (நெல்லியடி மெ. மி. த. க.); பரதம் (குழு) (நெல்லியடி மெ. மி. த. க.); ஆண் (கிராமியம்) (தனி)- க. கர்ணன் (கரணவாய் வேதாரணி)

நாடகம்: - உடுப்பிட்டி அ. மி கல்லூரி. கனிஷ்ட பிரிவு:- கர்நாடக இசை (தனி) ந. ஜெயதர்சினி (நெல்லியடிம ம வி); கர்நாடக இசை (குழு)- உடுப்பிட்டி மகளிர்; கிராமியஇசை (குழு) - கம்பர்மலை அ. த க. பா. புதியஆக்கம் இசை (ஆண்) -ஞானசாரியார் நாடகம்-திரு. இருதயக்கல்லூரி.

சிரேஷ்டபிரிவு: - பெண்- கர்நாடகஇசை (தனி)-ப. பவானி (விக்கினேஸ்வரா) கிராமிய இசை (குழு) - (ஞானசாரியார்) ஆண்- கிராமிய இசை (தனி) கு. மனோகரன் (உடுப்பிட்டி அ. மி கல்லூரி); கர்நாடகம் (தனி) பா. பிரபாகரன் (நெல்லியடி ம. ம. வி) நடனம் - பரதம்- வி. தாரணி நெல்லியடி ம. ம. வி. நாடகம்- உடுப்பிட்டி மகளிர்.

கௌரவம்

(சுழிபுரம்)

முப்பத்து இரண்டு வருட கால ஆசிரிய சேவையிலிருந்து இளைப்பாறிய பண்ணாகம் அமெரிக்க மிஷன் பாடசாலை அதிபர் திரு. கி. மார்க்கண்டுவுக்கு அப்பகுதி மக்களும், மாணவர்களும் சேர்ந்து பிரிவுபசாரம் ஒன்றை நடத்தி கௌரவித்தனர்.

மக்கள் முன்னேற்ற சங்கம் குருநகரில் உதயமானது

(குருநகர்)

யாழ்ப்பாணம், ஐந்தாம் வட்டாரத்திற்குள் அமைந்த சனசமூக நிலையங்கள், வேதாகமச்சபைகள், கலைக்கழகங்கள், விளையாட்டுத்துறை அமைப்புகள் ஒன்றிணைந்து மக்கள் முன்னேற்றச் சங்கம் என்னும் அமைப்பைத் தோற்றுவித்துள்ளன. இந்த அமைப்பினூடாக சமூகங்களுக்கு இடையில் தோன்றக் கூடிய குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்வதில் மேற்படி சங்கம் அதிக கவனம் செலுத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குருநகர் புனித ஆரோக்கிய நாதர் பாடசாலையில் நடைபெற்ற அமைப்புக்கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாகிகளாகக் கீழ்க் கண்டோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. ஏ. வேதநாயகம், உப தலைவர்: திரு. நீ. ஆசீர்வாதம், செயலாளர் திரு. ஏ. அருள்பேட், உப செயலாளர்: திரு. எஸ். சின்னையா, பொருளாளர்: திரு ஞா. அருளானந்தம், கணக்குப் பரிசோதகர்: திரு. ஆர். ஜோர்ஜ், பொது சனத் தொடர்பாளர்: திரு. வி எம். ஜெருட் மேலும் பத்துப்பேர்கள் அடங்கிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

மணிக்கோபுரம்

(சங்கானை)

வடலியடைப்பு அருள்மிகு ஸ்ரீ மகா காளி கோவில் அசையா மணிக்கோபுரம் அவ்வூர் இளைஞர்களின் முயற்சியினால் அவ்வூர் மக்களின் ஆதரவுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

துரிதமாக மின்னிணைப்பு

முள்ளியவளைச் சந்தையில் இருந்து வற்றாப்பளை அம்மன் ஆலயம் வரை போகும் வீதிக்கு மின்சார இணைப்பு வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதுவரை காலமும் இடைநிறுத்தப்பட்டிருந்த இந்த அபிவிருத்தி வேலையை மின்சார இலாகா துரிதமாகச் செய்து வருகிறது.

வரி விளம்பரம்

காணவில்லை

எனது மகள் வளர்மதியை (இதா) கடந்த 8-6-85 முதல் காணவில்லை. இவர் வீட்டை விட்டுப் புறப்படும்போது ஊதாநிறச் சட்டை அணிந்திருந்தார். உயரம் சுமார் 4·6 அடி. வயது 14. இவரைப் பற்றிய தகவல் தெரிந்தோர், தயவு செய்து கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். S. கிருஷ்ணசாமி பத்தர், முத்துமாரி கோவிலடி, மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

விற்பனைக்கு

மாநகர எல்லைக்குள் வீடு. கிணற்றுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 10, சின்னலம்பண்டு ஒழுங்கை, அரியாலை யாழ்ப்பாணம். தொடர்பு கொள்க: த. தனபாலசிங்கம் 16, ஆத்திக்காடு வடக்கு ஒழுங்கை, அரியாலை, யாழ்ப்பாணம்.

அறிவித்தல்

கொழும்புக்கு வரும் பிரயாணிகள் தங்க இடவசதி வழங்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்: ராமன், 27 ராமகிருஷ்ண வீதி, வெள்ளவத்தை, போன்: 587909

பெற்ற எசன்ஸ் சப்ளையேர்ஸ்

PETTAH ESSENCE SUPPLIERS

பேக்கரி தயாரிப்புகள்,
பிஸ்கட், ரொபி, இனிப்பு, குளிர்பானம்,
ஐஸ்கிறீம், சிற்றுண்டி வகைகளுக்கான சகலவிதமான
எசன்ஸ், கலர்ப்பவுடர், கேக் தயாரிப்புக்குத் தேவையான
சகல பொருட்களுக்கும்

ஊதுபத்தி — சாம்பிராணி
விளவு சூடம் — ரல்கம் பவுடர்
வெள்ளை மஞ்சள் வசலின்
வாசனைத்திரவிய எண்ணெய்
ஓடிக்கொலோன்

ஆகியவை தயாரிப்பதற்கான உற்பத்திப் பொருட்களும்
ஏனைய இதர

பேப்பர் வகை — பொக்ஸ்போட்
காட்போட் — ஆர்ட்போட்
நியூஸ்பேப்பர் — ஒயில் பேப்பர்
பிறவுண் பேப்பர்
ரிசு பேப்பர்
சலப்பின்

மற்றும் எல்லா பொலித்தீன் வகைகளுக்கும்
அச்சகங்கட்குத் தேவையான
சகல மை வகைகளுக்கும்
எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்பெற்ற ஸ்தாபனத்திற்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்.

223, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

223, Power House Road, Jaffna.

இன்று முதல்
உஷாமினி
(கே. கே. எஸ். வீதியில் முட்டாசுக்கடை சந்திக்கு சமீபத்தில்)
10-30, 2-30, 4-30, 6-30

HELL CATS
வயது வந்தவர்களுககு மட்டும்

விடுதலைக்காக போராடும் வீர இளைஞர்களுக்கும், பெண்மணிகளுக்கும் இத் திரைப்படம் சமர்ப்பணம்.

தவற விடாதீர்கள்

அறிவித்தல்

G, A. இம்மானுவல் என்ற பெயருள்ள காணாமல் போன எனது பாஸ் போட்டை கண்டெடுத்தவர் தயவு செய்து யாழ்ப்பாணம் அசோகன்ஸ் சுப்ப மார்க்கட்டில், ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

ஈழமுரசு

உதய சிந்தனை

நாம் ஒரு நாளைக்குத்தானும் போரிட விரும்பவில்லை. ஆனால் சூழ்நிலைகள் எம்மைப் போரிட நிர்ப்பந்தித்தால் எம்மால் இறுதிவரை போரிட்டு முடிக்க இயலும்.
-மா.ஓ சே-துங்

67, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

இதய ஒலி

17-7-1985 புதன்கிழமை (குரோதன ஆடி 2)

ஆனையும் அறுகம் புல்லில் தடக்க நேரிடும்

மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒரு சம்பவம், தென்னிலங்கையின் மாணவர் மத்தியில் நீண்டகாலமாக உருவாகிவந்த உயர்கல்வி தொடர்பான விரக்தி மனப்பான்மையின் ஒரு முக்கிய மைல்கல்லாகும்.

புதிய, புதிய சட்டங்கள் நாட்டில் உருவாக்கப்பட்டு வந்த போதெல்லாம் அவற்றுக்கு எதிராக தென்னிலங்கை மாணவர்கள் போர்க்கொடி உயர்த்தத் தயங்கவில்லை;

ஆனாலும், அவசரகாலச் சட்டம் என்ற அரக்கனை வைத்து, இரவோடு இரவாக மாணவர் குரலை நசுக்குவதில் அரசாங்கமே வெற்றிகண்டு வந்தது.

மாணவர்கள் மீது குண்டாந்தடிப் பிரயோகமும், கண்ணீர்ப் புகைப்பாய்ச்சலும், துப்பாக்கிச் சூடுகளும் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

பல்கலைக்கழகங்களை இழுத்து மூடுவதும், மாணவர்களை விடுதிகளை விட்டு வெளியேற்றுவதும், தேவையேற்படும் போது மாணவர்களைக் கைது செய்து தடுப்புக் காவலில் வைப்பதும் அரசாங்கங்களுக்குப் புதினமானதொன்றல்ல.

புதிய பல்கலைக்கழக திருத்தச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட போதும், தென்னிலங்கையில் மாணவர் படை திரண்டெழுந்தது.

ஆனால் அவசர காலச்சட்டமும், அரச படைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரமும் மாணவர் படையை பின்நோக்கிச் செல்ல வைத்துவிட்டது.

சந்தர்ப்பம் பார்த்துப் பொறுத்திருந்த மாணவர்கள், நேற்று முன்தினம் கிடைத்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி விட்டனர் என்றே கூறவேண்டும்.

மொரட்டுவ பல்கலைக் கழகத்தில் பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சிவில் என்ஜினியறிங் பிரிவுக்கான நவீன கட்டடத் திறப்பு விழாவுக்கு, பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவிருந்த மூன்று அமைச்சர்கள் தமது விஜயத்தை ரத்துச் செய்யுமளவுக்கு, மாணவர்கள் போராட்டம் வெற்றியீட்டியுள்ளது.

'கல்லாப்பெட்டி'யின் காவலனான நிதி அமைச்சர் றெனி டி மெல்லும், உயர்கல்வி பிரதி அமைச்சர் அத்தநாயகாவும் மட்டுமன்றி, மொரட்டுவ எம். பியும் பிரதி வெளிவிவகார அமைச்சருமான டிரோன் பெர்னான்டோவும் கூட இவ்வைபவத்தில் கலந்து கொள்ளமுடியாத வகையில் மாணவர்கள் தமது போராட்டத்தை நடத்தி வெற்றிபெற்றுள்ளனர்.

புதிய பல்கலைக்கழகச் சட்டத்தை மட்டுமன்றி, உயர்கல்வி விடயத்தில் அரசாங்கம் நடந்து கொள்ளும் போக்கையும் வன்மையாகக் கண்டிக்கும் சுலோகங்களுடன் ஆயிரக்கணக்கான மாணவர்கள் காலை முதல் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் எத்தனை எத்தனையோ ஆர்ப்பாட்டங்களும், போராட்டங்களும், ஊர்வலங்களும் வெவ்வேறு இடங்களில் நடத்தப்பட்டுள்ளன;

எதற்குமே அசைந்து கொடுக்காத அரசாங்கமும், அதன் அமைச்சர்களும் மொரட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள் முன்னால் "......களத்தே போட்டு வெறுங்கையோடு..." என்ற இராவணன் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டனர் என்றே எண்ணத் தோன்றுகிறது.

தென்னிலங்கையில் மாணவர் போராட்டத்திற்குக் கிடைத்த முதலாவது வெற்றியாக அமைந்துவிட்ட இச்சம்பவம், அரசாங்கத்துக்குக் கிடைத்த முதலாவது தோல்வியாகவும் அமைந்து விட்டது.

சட்டங்களாலும், சர்வாதிகார நடவடிக்கைகளாலும் எப்பொழுதுமே ஆட்சி நடத்த முடியுமென்ற நம்பிக்கைக்கு அடிக்கப்பட்ட முதலாவது அபாயச்சங்காக இந் நிகழ்ச்சி அமைந்து விட்டது.

"ஆனையும் அறுகம் புல்லில் தடக்க நேரிடும்" என்பார்கள்.

மொரட்டுவ சம்பவம் அறுகம் புல்லா அல்லது அபாயக் கிடங்கா என்பதை உடனடியாகச் சொல்ல முடியாது.

ஆனால், அரசாங்கம் தனது போக்கை மாற்றுவதற்கு காட்டப்பட்ட முதல் சமிக்ஞையாக இதனைக் கொள்ளவேண்டும்;

சிரியா உதவியுடன் உடன்பாடு உருவானது

மேற்கு பெய்றூட்டில் புதிய பாதுகாப்புத் திட்டம் அமுல்!

(பெய்றூட்)

மேற்குப் பெய்றூட்டில் புதிய பந்தோபஸ்துத் திட்டம் நேற்று முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது, இதன் செயற்பாட்டின் பொருட்டு சகல சக்திகளும் அங்கம் வகிக்கும் கமிட்டி ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது, லெபனான் பிரதம மந்திரி திரு. கராமி இது பற்றிய அறிவித்தலை வெளியிட்டுள்ளார், சிரியாவின் ஆதரவுடன் இப் புதிய பந்தோபஸ்துத் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது, இந்தவகையில் உடன் படிக்கை ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இப்புதிய பந்தோபஸ்துத் திட்டமானது முஸ்லீம் படைகளினது ஆயுத வசதிகளைக் கலைப்பதற்கும் அதிகார நிலையை லெபனான் படைகளிடமே ஒப்படைப்பதற்கும் வழிகோலுமென நம்பப்படுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

லெபனானில் கிளர்ச்சிப் படைகளுக்கிடையிலான மோதல்கள் பல விபரீதங்களை விளைவித்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

ஸிம்பாப்வே மந்திரி சபை: வெள்ளையருக்குக் கல்தா!

(லண்டன்)

ஸிம்பாப்வே பிரதம மந்திரி திரு. றொபேட் முகாபே தனது புதிய அமைச்சரவையை அமைத்துள்ளார்.

இந்த அமைச்சரவையில் முன்னாள் விவசாய மந்திரியாகக் கடமை புரிந்த வெள்ளை இனத்தவரான திரு. ரெனிஸ் நோமனுக்கு இடமளிக்கப்படவில்லை.

ஆபிரிக்க நிலைப்பாட்டிற்கு எதிரான வெள்ளையர் ஸிம்பாப்வேயில் இருந்து வெளியேறி விடவேண்டும் என்று பிரதம மந்திரி திரு. முகாபே தனது பதவியேற்பின் பின் அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மருத்துவ அறிக்கையில் தகவல்

றீகனின் சதை வளர்ச்சியில் புற்றுநோய் தன்மையா?

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனல்ட் றீகனின் குடலில் காணப்பட்ட சதை வளர்ச்சி புற்று நோய் தன்மையைக் கொண்டது என இப்போது மருத்து நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர் என நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

சனிக்கிழமை நடைபெற்ற அறுவைச் சிகிச்சையையடுத்து அவருக்குப் புற்றுநோய் இல்லை என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதி வாஷிங்டனில் கடற்படை மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவர் உற்சாகமாக இருப்பதாகவும் மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

ராஜீவ் நாவில் ★ தமிழ் ★

(சென்னை)

இந்திரா காங்கிரஸ் நூற்றாண்டையும், கர்மவீரர் காமராஜர் ஜனன தினத்தையும் முன்னிட்டு சென்னை மெரீனா கடற்கரையில் திங்கட்கிழமை இரவு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பிரதம மந்திரி திரு ராஜீவ்காந்தி தமிழில் தன் உரையை ஆரம்பித்தார். "வணக்கம் இக்கூட்டத்தில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்" என்று அவர் ஆரம்பித்து பின் தன் உரையை ஆங்கிலத்தில் நிகழ்த்தினார் இக் கூட்டத்தில் வைத்து பிரதமருக்குப் பட்டு வேஷ்டியும் அவர் துணைவியாருக்குப் பட்டுப் புடவையும் வழங்கப்பட்டன;

அவுஸ்திரேலிய விஜயத்தின்போது

நியுஸிலாந்து மீது சூல்ட்ஸ் கண்டனம் தெரிவிப்பு!

(கன்பரா)

தற்போது அவுஸ்திரேலிய விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. ஜோர்ஜ் சூல்ட்ஸ் நியுஸிலாந்தை மறைமுகமாகக் கண்டித்தார்.

நியுஸிலாந்துடனான கருத்து வேறுபாடு நீங்கும் வாய்ப்பு உண்டென்று அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் திரு. ஹெய்டன் திரு சூல்ட்ஸுடனான சந்திப்பின் போது நம்பிக்கை தெரிவித்தார்.

அமெரிக்கப் போர்க் கப்பல்கள் தமது துறைமுகங்களில் தரித்து நிற்கும்போது அணு ஆயுதங்கள் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும் அல்லது தரித்துச் செல்ல அனுமதிவழங்கப்படமாட்டாது என நியுஸிலாந்து அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

காளையின் மிரட்சி ★ எழுவர் காயம் ★

(ஸ்பெயின்)

காளைகள் போருக்குப் பெயர் பெற்ற நாடு ஸ்பெயின் என்பது உலகம் அறிந்த விடயம். இங்கு புனிதர் சேன் பேர்மினின் வருடாந்த உற்சவத்தின்போது நிகழ்ந்த ஓர் சம்பவம் பற்றிய தகவல் வெளியாகியுள்ளது. இத்திருநாளையொட்டி 'ஒன்ஸிபரோ' எனப்படும் சம்பிரதாயச் சடங்கு ஒன்றும் நிகழ்வதுண்டு. அப்போது வடஸ்பெயின் தெருக்கள் ஊடாக போரிடும் காளைகள் பவனியாக விரட்டிச் செல்லப்படும் அரிய காட்சி காண மக்கள் பெருமளவில் கூடுவது வழக்கம். அன்று இவ்விதம் காளைகள் செல்கையில் ஓர் காளை மட்டும் பவனியை விட்டு விலகி நின்று மிரண்டு திடீரென எவரும் எதிர்பாராத வகையில் மக்கள் கூட்டத்துள் புகுந்து பெரும் ரகளையை ஏற்படுத்தி விட்டது. இதனால் எழுவர் காயமுற நேர்ந்தது; பின்னர் மிகுந்த பிரயத்தனத்தின் பின் அக்காளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது;

பாகிஸ்தானில் மீண்டும் கலவரங்கள் மூண்டன

(கராச்சி)

பாகிஸ்தானில் மீண்டும் கலவரங்கள் உருவாகியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கராச்சிப் பகுதியில் மூன்று பொலிஸ் நிலையப் பகுதிகளில் இதன் எதிரொலியாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது;

பொலிஸார் நடத்திய துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் ஒன்றின் எதிரொலியாகவே இக்கலவரங்கள் ஏற்பட்டன என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தானில் பேய் மழை

(ராவல்பிண்டி)

பாகிஸ்தானில் பேய்மழை தொடர்ந்து பெய்துவருவதால் அனர்த்தங்கள் பல விளைந்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ராவல்பிண்டிக்கு அருகே வீடு ஒன்று இடிந்து வீழ்ந்ததில் எழுவர் மடிந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இடைவிடாத மழையால் பெருமளவு நஷ்டங்கள் உண்டாவதாக பாகிஸ்தான் வானொலி நேற்றுக் கூறியது.

15 பேர் காயம்

(திருச்சி)

திருச்சியில் பொலிஸ் வான் ஒன்றும் லொறி ஒன்றும் மோதிக்கொண்டதில் பதினைந்து பேர் காயமடைந்தனர்;

ஈழமுரசு

10 லட்சம் ரூபா நகை, பணத்துடன் வங்கி மனேஜர் தலைமறைவு

சுமார் பத்து லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகை, பணம் ஆகியவற்றுடன் கிராமிய வங்கி மனேஜர் ஒருவர் தலைமறைவாகிவிட்டதாக பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. புத்தளம் பகுதியிலுள்ள ஆராய்ச்சிக்கட்டு என்ற இடத்திலேயே இச்சம்பவம் நடைபெற்றது. கடந்த சில நாட்களாக கிராமிய வங்கி மனேஜர் வேலைக்குச் செல்லாததால், பொலிஸாரின் உதவியுடன் வங்கியின் பாதுகாப்புப் பெட்டி பரிசோதிக்கப்பட்டபோதே சுமார் பத்து லட்சம் ரூபா பெறுமதியான அடகு வைக்கப்பட்ட நகைகளும், பணமும் காணாமல் போனது தெரியவந்தது. விசேஷ பொலிஸ் கோஷ்டியினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை:

பாரத அரச கொள்கையில் எந்த மாற்றமும் கிடையாது!

பிரதமர் ராஜீவ் அறிவிப்பு

(சென்னை)

"இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் இந்திய அரசின் கொள்கையில் எந்த மாற்றமுமில்லை" என்று பாரதப்பிரதமர் சென்னையில் பத்திரிகையாளர் மாநாட்டில் பேசுகையில் தெரிவித்தார்.

"பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சிக்கிறோம்; தமிழ் தீவிரவாதிகளையும் இலங்கை அரசையும் பேசவைக்கும் முயற்சியில் வெற்றி கொண்டுள்ளோம்" என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்சினையில் மத்திய அரசின் நிலையில் எந்த மாற்றமும் இல்லை" என்று கூறிய பிரதம மந்திரி பாரத அரசுக்கும் இலங்கைத் தமிழ் போராளிகளுக்கும் இடையே எந்தத் தொடர்பும் இல்லை" என்றும் குறிப்பிட்டார்.

"இலங்கைத் தமிழ்ப் போராளிகள்தான் இலங்கை அரசுடன் பேசி இப்பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்" என்றார் அவர்.

"இலங்கையில் சகல பகுதி மக்களும் சமாதானத்துடன் வாழவேண்டும் என்பதே எம் விருப்பம். அங்குள்ள தமிழ்க் குழுக்களும், அரசும் தான் வேறுபாடுகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். இதில் தலையிட நாம் விரும்பவில்லை" என்றும் அவர் சொன்னார்.

"இலங்கைத் தமிழர்களின் சுதந்திரத்தை விட்டுக்கொடுத்துப்பெறும் எத்தீர்வையும் ஏற்க முடியாது" என்றும் அவர் கூறினார்.

"ஒரு போதும் வன்முறைகள் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது; மேற்காசிய மற்றும் ஆபிரிக்க நிலைமை இதனை நிரூபித்துள்ளது" என்றும் அவர் சொன்னார்.

நூல் கண்காட்சி 22ம் திகதி முதல்

தமிழ் நாடு அரசாங்கத்தால் யாழ். பொதுஜன நூலகத்திற்கென அன்பளிப்பாக வழங்கப்பட்ட புத்தகங்களின் கண்காட்சி எதிர்வரும் 22ம் திகதி திங்கட்கிழமை முதல் ஒரு வார காலத்திற்கு நடைபெறவுள்ளது. நல்லூர் இந்து விடுதியில் இடம் பெறவுள்ள இக் கண்காட்சிக்கு தமிழக அரசு வழங்கிய சுமார் ஏழாயிரம் நூல்களும் வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட....

...1-ஆம் பக்கத் தொடர்

முத்திரை பெற்றவர்களுக்கே இரண்டாம் கட்ட உணவு முத்திரை வழங்கப்பட்டுவருகின்றது. அடுத்த ஆறு மாதங்களுக்கு இது நடைமுறையிலிருக்கும்.

கரையோரப் பகுதி உதவி அரசாங்க அதிபர்கள் மூலம் உணவு முத்திரை வழங்கப்பட்டது

தமிழர் ....

...1-ஆம் பக்கத் தொடர்

யில் அமைய வேண்டும் எனவும் ராஜீவ் காந்தி பத்திரிகையாளர் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்

இலங்கை ஜனாதிபதியுடன் கடந்த மாதம் தாம் நடத்திய பேச்சுவார்த்தையின் போது ஈழத் தமிழ்மக்களுக்கு போதிய சுயாட்சியை வழங்க அவர் சம்மதித்ததாகவும் பிரதமர் குறிப்பிட்டுச் சொன்னார்.

கட்டுநாயக்கா....

-1ஆம் பக்கத் தொடர்

வரை சுமார் முப்பது பேர் கைதாகியுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

தேடப்பட்டு வரும் தொலைதொடர்பு பரிசோதகருடனும் அவரது மனைவியுடனும் தொடர்புடையவர்களெனச் சந்தேகிக்கப்படும்ஒரு தம்பதி நேற்று வெள்ளவத்தை பொஸ்வல் பிளேஸில் வைத்து கைது செய்யப்பட்டதாகத் தெரியவந்துள்ளது இதேவீதியிலேயே ரஞ்சன் தம்பதி வசித்து வந்தது குறிப்பிடத்தக்கது.

பாரதப் படைக்கு புதிய விமானம்

உலகத்தின் மிகப் பெரிய போக்குவரத்து விமானங்களில் ஒன்றான ஐ. எல். 76 ரக விமானத்தை இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. நரசிம்மராவ் இந்திய விமானப் படைக்குப் பெற்றுள்ளார்.

சோவியத் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட இந்த விமானத்தில் நாற்பத்தேழாயிரம் கிலோகிராம் பொருட்களை ஏற்றிச் செல்லலாம்.

யுத்தகாலத்தில் மீட்பு வேலைகளுக்கும், அதிகளவு துருப்புக்கள் முதலியவற்றைக்கொண்டு செல்லவும் இது பயன்படுத்தப்படும்.

தட்சரின்....

...1-ஆம் பக்கத் தொடர்

பிரிட்டிஷ் அரசு அனுமதிக்காது என பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிறட் தட்சர் தம்மைச் சந்தித்த அமெரிக்க வழக்கறிஞர் குழுவிடம் தெரிவித்தார்.

உலகில் பயங்கரவாத நடவடிக்கைகள் அதிகரிப்பதையும், விமானக் கடத்தல் சம்பவங்களையும் அவர் வன்மையாகக் கண்டித்தார்.

யாழ் மாநகராட்சிப்....

...1-ஆம் பக்கத் தொடர்

நாதன், வீடமைப்பு அதிகார சபை பொது முகாமையாளர் திரு. ரி. முருகையா ஆகியோர் நேற்றுக்கூடி 510 விண்ணப்பங்களைத் தெரிவு செய்தனர்.

பத்து லட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் முப்பது லட்சம் ரூபா இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான விண்ணப்பப்பத்திரங்கள் நேரடியாகச் சென்று விநியோகிக்கப்படும் என்றும், ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் இரண்டாயிரம் ரூபா முதல் கடன் வழங்கப்படும் என்றும் ஆணையாளர் திரு.சிவஞானம் தெரிவித்தார்.

குரல் பதிவுப்....

- 1ஆம் பக்கத் தொடர்

விசாரணை நடத்தும் நீதிபதி திரு. கிர்பால் முன்னிலையில் இது திறக்கப்பட்டது. இதன் காந்த பதவி நாடாப்பகுதிகள் மேலும் ஆராய்ச்சி செய்வதற்காக அணு ஆராய்ச்சிப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இந்த ஆராய்ச்சியின் பின்பு விமான விபத்து பற்றிய சகல தகவல்களும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நீதிபதி கிர்பால நேற்று முதலாவது விசாரணையை நடாத்தினர்.

புதிய நிர்வாகிகள் தெரிவு

யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம் மூடப்படமாட்டாது

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் புதிய தலைவராக நெற் சந்தைப்படுத்தும் சபையின் முன்னாள் பிராந்திய முகாமையாளரான திரு. வி. கே. சபாரட்ணம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். புதிய நிர்வாக இயக்குனராக திரு. கே. எஸ் வேல்முருகு தெரிவாகியுள்ளார். நிர்வாக சேவையிலிருந்து இளைப்பாறியவரான இவர் முன்னர் கணக்காளராகவும் கடமையாற்றியவர்.

முன்னர் தலைவர் பதவியை வகித்த டாக்டர் யோகநாதனும், நிர்வாக இயக்குனர் பதவியை வகித்த திரு. செ. சிவஞானமும் ராஜினாமா செய்ததையடுத்தே புதிய தெரிவுகள் இடம்பெற்றன.

அதேவேளையில் பொதுமக்கள் உதவியுடன் சங்கத்தைத் தொடர்ந்து நடத்துவதெனவும் சங்கப் பொதுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

நடவடிக்கை எடுக்கப்படும்

நாட்டில் ஒற்றுமை, அமைதியை குலைக்க எவராவது நடவடிக்கை எடுத்தால் அவர்கள் மீது அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்கும் என தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி கல்கிசையில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

பூஸாவிலிருந்து....

...1-ஆம் பக்கத் தொடர்

களை விடுவிக்கத் தீர்மானித்துள்ளதாகவும், விடுதலையாகும் ஒவ்வொருவரது பெற்றோரும் பூஸாவுக்கு அழைக்கப்பட்டு, அவர்கள் பத்திரமொன்றில் ஒப்பமிட்ட பின்னரே சம்பந்தப்பட்டவர்கள் ஒப்படைக்கப்படுவார்களென்றும் தெரியவந்துள்ளது.

பூஸாவுக்கு அனுப்பப்பட்ட முதலாவது பட்டியலிலுள்ள நூறு இளைஞர்களும் இவ்வார இறுதிக்குள் விடுதலை பெறுவர். இவர்கள் தங்கியிருக்கும் வீட்டு விலாசங்களும் பூஸாவுக்குத் தெரிவிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

மிகுதி 543 இளைஞர்களது பெயர் விபரங்களும் படிப்படியாகவே வெளியிடப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ் மத்திய....

அதிபர் திரு. நா. இராசரத்தினம் தலைமையில் நடைபெறும். யாழ். கல்விப்பணிப்பாளர் திரு எம். சியாம் பிள்ளை ஆண்டுநிறைவு கட்டடத்திற்கு பெயர் சூட்டுவதுடன், ஆரம்பப்பிரிவு புதிய கட்டடத்தையும் திறந்துவைப்பார்.

யாழ். வட்டாரக் கல்வியதிகாரி திரு இ. சிவானந்தன், முன்னாள் அதிபர் திரு. என். எஸ். இரத்தினசிங்கம் ஆகியோர் உரையாற்றுவார்கள். ஆசிரியர் திரு. எஸ். திலகநாயகம் போல் இசைக்கச்சேரி செய்வார்.

மூன்றும் நாளான சனிக்கிழமை பழைய மாணவரின் விளையாட்டுக்கள், அதிபரின் தேநீர் விருந்து, வருடாந்த பொதுக்கூட்டம், மதியபோசனவிருந்து என்பனவும் இடம் பெறும்.

உருக்கமான வேண்டுகோள்

எமது குடும்பத் தலைவரும், எமது நிறுவன (City Medicals) உரிமையாளருமாகிய திரு. L. V. சிங்கராயர் 10-6-85 இல் சென்னையில் வைத்து இனந்தெரியாத இளைஞர்களால் கடத்திச் செல்லப்பட்டார்.

இவரைக் கடத்தியதன் மூலம் எமது குடும்பத்தினர் நிர்க்கதிக்காளாக்கப்பட்டிருப்பதோடு, இவரது நிறுவனங்களில் வேலைசெய்யும் சுமார் நாற்பது ஊழியர்களது குடும்பங்களும் வருமானம் இழக்கும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இச் சம்பவம் நிகழ்ந்து ஒரு மாதமாகியும் இவரைப் பற்றிய தகவல் எதுவும் கிடைக்காமையால் குடும்பத்தினரும், ஊழியர்களும் அநாதரவான நிலையில் மிகவும் கவலைகொண்டுள்ளனர்.

நாங்கள் அனைவரும் இவரை விடுதலை செய்து எமது கவலையைப் போக்குமாறு வேண்டுகின்றோம்,

487, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தாய், சகோதர,
சகோதரிகள்,
ஊழியர்கள்.

31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர்: ப. சாந்தாராமன் (சாந்தா)

அம்பிஹா ஜுவல்ஸ், கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்

தோற்றம்
1-5-1946

மறைவு
17-6-1985

எனது அன்பு நண்பனுக்கு எனது கண்ணீர் அஞ்சலிகள். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எனது பிரார்த்தனைகள்.

என்றும் அன்புடன் நண்பன்,
த. விநாயகமூர்த்தி

"ஈழமுரசு" சஞ்சிகை [illegible] 87, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 17-7-85 புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336